# இலக்கியங்களில் தமிழர் பண்பாட்டு ஆய்வுகள்



14ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டு ஆய்வரங்கக் கட்டுரைகள்

முனைவர் பாஞ். இராமலிங்கம்

# இலக்கியங்களில் தமிழர் பண்பாட்டு ஆய்வுகள்

14ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டு
ஆய்வரங்கக் கட்டுரைகள்


பதிப்பாசிரியர்

முனைவர் பாஞ். இராமலிங்கம்

புதுவைப் பல்கலைக்கழகம்



PUDU BOOKS

**புதுச்சேரி கூட்டுறவுப் புத்தகச் சங்கம், P. 653**

புதுச்சேரி

**2020**

Publication No. 02 / 2020

Title : Ilakkiyangalil Tamizhar Panpattu Aaivugal

Editor : Panch. Ramalingam

Edition : First Edition, January 2020

ISBN :

Price : Rs. 300/-

Pages : 356

Printed at : Print Process, Chennai - 600 014.

Book Layout & Design : Platinum Graphics, Puducherry - 605001.

Published by : Puducherry Co-op. Book Society, P.653
C21, Industrial Estate, Thattanchavady.
Puducherry - 9

Copies can be had from
Vulaga Tamil Panpattu Iyakkam
#17, 14th Street, Krishna Nagar,
Puducherry - 605008, India.
Email : imtcindia2015@gmail.com

© All rights reserved No part of this book may be repoduced or retrieved or Photocopied in any form excepting for the purpose of reference or research without prior permission of the Editor.

37

# தமிழர் பாரம்பரிய விளையாட்டான கிளித்தட்டு: உலகளாவிய பரம்பலுக்கான ஒரு கல்விசார் ஆய்வு

திரவியநாதன் திலீபன்
மெய்யியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்
thileepan1983@yahoo.com

மார்க்கண்டன் ரூபவதனன்
இலங்கை ஊவா வெல்லஸ்ஸப்
பல்கலைக்கழகம், பதுளை
markruban@yahoo.co.uk

ஆய்வுச்சுருக்கம்

கிளித்தட்டு விளையாட்டானது தன்னளவில் ஒரு விளையாட்டாக மட்டுமன்றித் தமிழர்களின் பாரம்பரியங்களையும் பண்பாட்டுக் கோலங் களையும் பிரதிபலித்துக்காட்டுகின்றது. பொதுவாக, இதனை ஒரு விளையாட்டாகக் கிராமந் தோறும் ஆடுகளம் அமைத்து சிறியவர்கள் முதல் பெரியோர்கள் வரை விளையாடி வந்திருக்கின்றனர். இதன் படிப்படியான வளர்ச்சியானது தமிழர்களின் வரலாறு சார்ந்த நிகழ்வுகளில் பொழுது போக்கிற்காக மட்டுமன்றி போட்டி சார்ந்த விளையாட்டாகவும் பரிணமித் திருக்கிறது. இருந்தும் மேலைத்தேய விளையாட்டுக்களான துடுப்பாட்டம், கால்பந்து, வலைபந்து போன்றவற்றின் வருகையினாலும் சமூகங்களுக் கிடையிலான பண்பாட்டு மாற்றங்களினாலும் தமிழர் மத்தியில் நலி வடைந்து போயுள்ள பாரம்பரிய விளையாட்டுக்களில் கிளித்தட்டும் ஒன்று. தமிழர் தம் பாரம்பரியங்களை, பண்பாட்டு கோலங்களை வெளிப்படுத்தும் இத்தகைய விளையாட்டுக்களைப் பேணிப்பாதுகாப்பதும் அவற்றுக்கு புத்துயிரளிப்பதும் கடமையாகும். அந்தவகையில், இலங்கையில் வட புலத்தில் கிளித்தட்டு சிறப்பாக விளையாடப்பட்ட ஊர்களிலுள்ள விளையாட்டுக் கழகங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் கிளித்தட்டு விளையாட்டில் பங்குபற்றிய வீரர்களிடம் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல் களிலிருந்தும், பாரம்பரிய விளையாட்டுக்கள் தொடர்பாக வெளிவந்துள்ள நூல்கள் மற்றும் சில அறிமுகப் பதிவுக் குறிப்புகளிலிருந்தும் ஆய்வுக்கான தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. வரலாற்று மற்றும் விபரண ஆய்வு முறையியல்கள் கையாளப்பட்டுத் தரவுகள் அலசப்பட்டுள்ளன. அந்த வகையில் இவ்வாய்வுக் கட்டுரையானது கிளித்தட்டு எனும் பாரம்பரிய விளையாட்டைத் தொடர்ந்து பேணுவதற்கான முயற்சியாகவும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அங்கிகாரம் பெறச்செய்வதற்கான தேடலாகவும் அமைகின்றது.

தேடு சொற்கள்: கிளித்தட்டு, தாச்சி, தமிழர் விளையாட்டு, தமிழ்ர் பாரம்பரியம்

## 1. அறிமுகம்

உலகில் வாழும் இனங்கள் மத்தியில் பல்வேறு வகையிலான விளையாட்டுக்கள் பயில்நிலையில் இருந்து வருகின்றன. அவற்றுள் பல விளையாட்டுக்கள் பல்வேறு காரணங்களால் உலகப் பொதுவானவை யாகவும், சில விளையாட்டுக்கள் குறிப்பிட்ட இனங்கள் மத்தியிலும், இன்னும் சில விளையாட்டுக்கள் தனித்துவமாக அவ்வவ் இனங்களால் மட்டும் விளையாடப்படுகின்றன. அவ்வாறே தமிழர் மத்தியிலும் பல விளையாட்டடுக்கள் பயில்நிலையில் உள்ளன. காலனித்துவ ஆட்சிகள், பூகோளமயமாக்கம், மற்றும் தேசிய மயமாக்கம் போன்றவற்றால் பல விளையாட்டுக்கள் உலகப் பொதுவான விளையாட்டுக்களாகத் தமிழர் மத்தியில் வழங்கிவருகின்றன. அதேவேளை, மேற்கூறிய காரணங்களால் தமிழர்களது பாரம்பரிய விளையாட்டுக்கள் பல அருகிவந்துள்ள நிலையில் ஒருசில விளையாட்டுக்கள் எச்சம் சொச்சமாக ஆங்காங்கே தமிழர்களால் விளையாடப்பட்டும் வருகின்றன. தமிழர் பாரம்பரிய விளையாட்டுக்களைக் கட்டமைப்புச் செய்து, மீள் கட்டமைப்புச் செய்து, அவ் விளையாட்டுக்களின் அறிவியல், நுட்பவியல், சமூகவியல், உடற்கூற்றியல் மற்றம் உளவியல் முக்கியத்துவங்களைகல்விசார் ஆய்வுக்குட்படுத்தி, ஆவணப்படுத்துவதோடு மட்டும்லலாது அவ் விளையாட்டுக்களைத் தமிழர் மத்தியில் அன்றாடப் பயிநிலையாக்குவதும், ஏனைய இனங்கள், தேசங்கள் மத்தியில் பரம் பலடைச்செய்வதும் முக்கியமாகும். அவ்வாறாக, தமிழர்களின் தனித்துவ விளையாட்டுக்களில் ஒன்றான, இலங்கைத் தமிழர்களின் தேசிய விளையாட்டுக்களில் முதன்மையாகக் கருதப்படுவதுமான கிளித்தட்டு குறித்து கவனமெடுப்பதும், கல்விசார் ஆய்வுகள் மேற்கொள்வதும் தமிழர் மத்தியிலும் பிற இனங்கள், தேசங்கள் மத்தியிலும் பரம்பலடைச்செய்து இயங்குநிலைப்படுத்துவதும் முக்கியமாகும். இவற்றின் பொருட்டு கிளித்தட்டு விளையாட்டுத் தொடர்பான விடயங்களை தேசமயமாக்கு வதோடு, உலகளாவிய தமிழர்கள் ஊடாக சர்வதேசமயமாக்குவதும் இன்றியமையாதனவாகும்.

## 2. கிளித்தட்டு: தொன்மையும் வழமையும்

கிளித்தட்டு விளையாட்டுக்கென பண்பாடுசார் வரலாறும் பயன் பாட்டுத்தன்மையும் உண்டு. அதனால், இவ்விளையாட்டு எமது பாரம் பரியங்களையும் பண்பாட்டுக் கோலங்களையும் உணர்ந்துகொள்ள, அறிந்துகொள்ள உதவுகின்றது. வயது, பால் வேறுபாடுகளின்றி சிறியோர் கள் முதல் பெரியோர்கள் வரை மிகவும் ஆர்வத்தோடும் மகிழ்ச்சியோடும் கிளித்தட்டினை விளையாடி வந்திருக்கின்றனர். மேலும், இவ்விளை யாட்டானது விவசாயிகளின் கலாசார, விழுமியங்களைப் பேணுகின்ற ஒன்றாகவும் காணப்படுகின்றது.

கிளித்தட்டு விளையாட்டின் தோற்றம் பற்றி நோக்குகையில், அது தமிழர் வாழ்வியலுடன் மிகவும் நெருக்கமானதும், சீர்மிகு படிமுறை

இவ்விளையாட்டானது உடலிற்கு புத்துணர்ச்சியை வழங்குவதோடு மூளைக்கும் பயிற்சியை அளிக்கக்கூடியதொன்றாகவும் விளங்குகிறது. மேலும் இவ்விளையாட்டின் மூலம் சமூகங்களிற்கிடையிலான ஒற்றுமைத் தன்மை, சமத்துவம், முடிவெடுத்தல், தலைமைத்துவம் போன்ற நற்பண்புகள் தழைத்தோங்குவதற்கும் உறுதுணையாக விளங்குகின்றது எனலாம்.

மேலைத்தேய விளையாட்டுக்களான கிரிக்கட், கால்பந்து, வலைப்பந்து மற்றும் கூடைப்பந்து போன்ற விளைாட்டுக்கள் அறிமுகமான துடன் தமிழ்ச் சமூகங்களிற்கிடையே சிறப்பாக விளையாடப்பட்டு வந்த பாரம்பரிய விளையாட்டுக்களுள் ஒன்றான கிளித்தட்டும் காலப்போக்கில் செல்வாக்கிழந்து நலிவடையத்தொடங்கியது. குறிப்பாக மேலைத்தேய விளையாட்டுக்கள் சர்வதேச அங்கிகாரங்களுடன் விளையாடப்பட்டு வருகின்றமையால் அவற்றின் செல்வாக்கு மக்களிடையே அதிகரித்துள்ளன. இதனால் பாரம்பரிய விளையாட்டுக்களின் மீதான நாட்டம் வலுக்குன்றத் தொடங்கியது எனலாம்.

இன்றைய நிலையில் பாரம்பரிய விளையாட்டுக்கள் அழிந்துபோய் விட்டதென்றே கூறலாம். எனவே அவற்றைப் பாதுகாத்து உயிரூட்டும் முயற்சிகள் மேற்கொள்வது தமிழர்களாகிய ஒவ்வொருவருடைய கடமை யாகும். அத்தோடு இலங்கையைப் பொருத்தவரையில் பாரம்பரிய விளையாட்டுக்கள் எவற்றுக்குமே அரச அங்கிகாரங்கள் கிடைக்கவில்லை என்றே கூறலாம். உண்மையில் அவற்றுக்கான காரணங்களைக் கண்டறிதலும் விளையாட்டினைப் புத்துயிர்பெறச் செய்து மீட்டுருவாக்கம் செய்வதும் இவ்வாய்வின் நோக்கங்களாகும்.

## 3. விளையாட்டுக் கட்டமைப்பு

கிளித்தட்டு விளையாட்டு ஆடுகளம், ஆடுவோர் தொகை, ஆடும் முறை என்பன தொடர்பான தரப்படுத்தப்படுத்தல் மூலம் முறைப்படுத்தப் பட்ட கட்டமைப்பு மற்றும் விதிமுறைகளைக் கொண்டமைந்து காணப் படுகின்றது. விதிமுறைகளின் பிரகாரம் ஓர் அணிக்குத் தாலா ஆறு வீரர்களைக்கொண்ட இரண்டு அணிகளுக்கிடையே போட்டி நடைபெறு கின்றது. ஓர் அணியினர் உட்புகுவோர் என்றும் மற்ற அணியினர் காப்போர் அல்லது மறிப்போர் என்றும் இவ்விரு அணிகளும் அழைக்கப்படுகின்றன.

இவ்விரு அணிகளும் கிளித்தட்டு விளையாட இறங்கும் ஆடுகளம் அல்லது மைதானமானது 56 அடி ஒ 33 அடி நீள அகலமுடைய நீள் சதுர அல்லது செவ்வக வடிவில் அமைக்கப்படும். இதன் அகலப்பாட்டில் சம அளவுகளாகப் பகுக்கப்பட்ட ஐந்து பெட்டிகளின் எல்லைக் கோடுகளாக ஓர் அடி அகலத்திலான ஆறு சுவடுகள் காணப்படும். அதேபோல நீளப் பாட்டில் சம அளவுகளாகப் பகுக்கப்பட்ட இரண்டு பெட்டிகளின் எல்லைக் கோடுகளாக ஓர் அடி அகலத்திலான மூன்று சுவடுகள் காணப்படும். இச்சுவடுகள் ஒன்றையொன்று வெட்டிச்செல்வனவாக வரையப்பட்டி ருக்கும். விளையாட்டினைத் தலைமைதாங்கும் கிளி அல்லது தாச்சி ஓடுவதற்கு நீளப்பாட்டில் ஓர் அடி அகலமான கரைச்சுவடுகள் இரண்டும் நடுச்சுவடு ஒன்றும் உள்ளன.


வளர்ச்சி கொண்டதும், சுவாரசியமான கதைகளைக் கொண்டமைந்தும் காணப்படுகிறது. தமிழர்களின் பாரம்பரியத் தொழில்களில் ஒன்றான வேளாண்மையின் போது வயல் காட்டில் நெல் விதைத்து அறுவடை செய்வது வழமை. இச் செயன்முறையின்போது நெல் மணிகளைப் பொறுக்க (உண்ண) வரும் கிளிகளை உழவர்கள் வரம்புகள் வழியாக ஓடிக்கலைத்து துரத்தும் வழக்கமுண்டு. அதாவது கிளிகளிடமிருந்து வயலைக் காக்கும்பொருட்டு வரம்புகளினூடாக அங்குமிங்கும் ஓடித்திரிவது காலப்போக்கில் ஒரு விளையாட்டாகப் பரிணமித்தது. பின்னாட்களில் வயல் வரம்பை ஒத்த கட்டமைப்பினைக் கருத்தில்கொண்டு ஆடுகளம் அல்லது மைதானம் அமைத்து விளையாடும் மரபு தமிழர்களிடையே தோற்றம்பெறலாயிற்று.

இவ்விளையாட்டுப் பற்றி தமிழறிஞரும் சொல்லாராய்ச்சி வல்லுனருமான தேவநேயப்பாவணர் (2000) "வயல் நிலங்களில் விளையும் நெற்பயிரைக் கொத்திச் செல்லவரும் கிளிகளை உழவர் துரத்தும் வழமையின்று கிளித்தட்டு தோற்றம்பெறலாயிற்று" எனக் குறிப்பிடுகின்றார். கிளிகளை உழவர் துரத்தும் பின்னணியில் 'கிளி'த்தட்டு என்று அழைக்கும் மரபு உருவாகியிருக்கவேண்டும். வயல் சொந்தக்காரர் அல்லது உழவர்கள் காப்பவர்களாகவும், கிளிகள் புகுவோர்களாகவும் வயல் நிலங்கள் விளையாட்டுக்காகப் பயன்படுத்தப்படும் பெட்டிகளாகவும் (தட்டுக்கள்) வரம்புகள் கோடுகளாகவும் மாற்றம்பெற்று கிளித்தட்டு விளையாட்டு உருவாக்கப்பட்டிருக்கிறது.

காலப்போக்கில் பிரதேச வழக்குளில் கிளித்தட்டு விளையாட்டு பல்வேறு பெயர்கள் கொண்டு அழைக்கப்பட்டுவந்துள்ளதையும் அறிய முடிகின்றது. இதனை, இலங்கையின் சில இடங்களில் 'தாச்சி' என்று அழைப்பர். அதாவது கிளி என்றழைக்கப்படும் பிரதான காப்பாளர் கிளித்தட்டு விளையாட்டின் தாச்சியாவார். அதாவது வழிநடத்துபவர். ஆதலால் அப்பெயரைக் அடிப்படையாகக்கொண்டு பேச்சு வழக்கில் 'தாச்சி' என்றழைக்கலாயினர். இன்னும் தமிழகத்தின் மருத நில மக்கள் சில இடங்களில் கிளித்தட்டினை 'தண்ணீர் புரி' விளையாட்டு என்றும் அழைப்பர். அதாவது வயல் நிலங்களில் தண்ணீர் பாய்ச்சுவது போன்று இவ்விளையாட்டுக்காக பயன்படுத்தப்படும் ஆடுகளம் இருப்பதனால் அப்பெயரை அடியொற்றி தோற்றம்பெற்றது என்று கூறிக்கொள்வர்.

இவ்வாறு தொன்மையான காலந்தொட்டுப் படிப்படியாக வளர்ச்சியடைந்த கிளித்தட்டானது காலப்போக்கில் சிறந்த கட்டமைப்புக்களுடனும் விதிமுறைகளுடனும் அமைந்த விளையாட்டாக சிறப்பிடம்பெற்று விளங்கியது. அத்தோடு தமிழர்களின் வரலாறு சம்பந்தப்பட்ட நிகழ்வுகளில் போட்டி மனப்பான்மையுடன் கூடிய விளையாட்டாகவும் பரிணாமம் பெற்றது. இவ்விளையாட்டு ஈழத்தில் குறிப்பாக தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களாகிய வடக்கு மற்றும் கிழக்கிலும் அதுபோல் இந்தியாவில் கேரளாவிலும் பரவலாக விளையாடப்பட்டு வந்ததொன்றாகும்.

## கிளித்தட்டு ஆடுகளத்தின் மாதிரி வரைபடம்



(ஆதாரம் - உடற்கல்வி, விளையாட்டுத்துறை அபிவிருத்திக்கான செயன்முறைத் திட்டம -1997-1999)

விளையாட்டு ஆரம்பிப்பதற்கு முன்னர் யார் உட்புகுபவர் யார் மறிப்பவர் என்பது நாணயச்சுழற்சி கொண்டு தீர்மானிக்கப்படும். உலகளாவிய ரீதியில் நடைபெறும் விளையாட்டுக்களில் இம்முறையையே பயன்படுத்துகின்றனர். இதன்போது சுழற்சியில் வெற்றிபெறுபவர் உட்புகுபவராக விளங்குவர். ஆனால் மறிக்கும் அல்லது காக்கும் அணியைச் சார்ந்த ஒருவரே 'கிளி' என்றழைக்கப்படுவது இங்கு கவனிக்கப்பட வேண்டியது. கிளியிடமே விளையாட்டினைத் தலைமைதாங்கும் பொறுப் புண்டு. இவர் ஆரம்பத்தில் கிளி, கிளி என்ற கூவியவுடன் உட்புகுவோர் பெட்டிக்குள் நுழைவார்கள். போட்டி விதிமுறைகளின்படி கிளி ஆடு களத்தின் சுற்றுப்பாதை எல்லைக் கோடுகளிலும் நீள் நடுக் கோட்டிலும் செல்லும் தகுதியைப் பெற்றவராவார். உட்புகுபவர்கள் யாரும் தாம் நிற்கும் பெட்டிகளைக் குறுக்கிடும் போது அவரகளைத் அடிக்க அல்லது எட்டித் தொட கிளிக்கு உரிமையுண்டு. இவர் உட்புகுபவர்களில் எவரையாவது தமது உடற்பாகத்தைக் கொண்டு தொட்டால் உட்புகுவோர் ஒட்டு மொத்தமாக ஆட்டம் இழப்பர்.

விளையாட்டின்போது உட்புகுபவர்கள் யாரேனும் ஒருவர் இடையில் உள்ள காப்பாளர்களின் மறிப்புகளைத் தாண்டி எதிர்த்திசையைச் சென்றடைந்து மீண்டும் உட்புகுந்த பகுதியை அல்லது எல்லையை அடைய

முயல வேண்டும். உட்புகுபவர்கள் ஒவ்வொரு பெட்டியைத் தாண்டும்போது காப்போரால் அல்லது மறிப்பவர்களால் தொடப்பட்டாலும் ஆட்டம் முடிவடைந்துவிடும். உட்புகுபவர் ஒருவர் காப்பாளரை அல்லது கிளியைத் தாண்டும் போது அவர் எந்தப் பக்கத்தால் தாண்டுகின்றாரோ அப்பக்கக் கையினாலேயே மறிப்பவர்கள் அவரை அடிக்க அல்லது தொட முடியும். தொடும்போது 'அடி' என்று காப்போர் அல்லது கிளி சத்தமாகக் கூறவேண்டும். அடி பட்டது ஏற்புடையதாயின் ஆட்டம் முடிவடையும். ஏற்புடையது இல்லையேல் ஆட்டம் தொடரப்படும்.

மேற்குறிப்பிட்டவாறு விதிமுறைகளையும் கட்டமைப்புக்களையும் அனுசரித்துக்கொண்டு சிறப்பான முறையில் விளையாடும்போது பங்கு பற்றும் வீரர்கள் மற்றும் பார்வையாளர் மனதைச் சமநிலைக்கு இட்டுச் செல்ல வழியேற்படுவதுடன் நல்ல ஆளிடைத்தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும் முடிகின்றது. இதனாலேயேதான் இவ்விளையாட்டினை, 'விரும்பியாடும் ஆட்டம்', 'இன்பம் விளைவிக்கும் ஆட்டம்', 'மகிழ்ச்சி என்ற உணர்வோடு தொடங்கி, அம்மகிழ்ச்சியோடு முடிவடைகிறது' எனப் பலவாறு கூறி அழைக்கின்றனர்.

## 4. கிளித்தட்டு விளையாட்டின் பயனுறுதிகள்

மனிதரிடமுள்ள இயல்பான பழக்கவழக்கங்களில் விளையாட்டு அல்லது விளையாடுதல் என்ற பண்பு அவரோடு இரண்டறக்கலந்துள்ளது. இதில் அகமகிழ்வும் உடல் ஆரோக்கியமும் உள்ளடங்கியிருக்கின்றது. இதனால் ஒவ்வொருவரும் விளையாட்டை நாடிச்செல்ல வேண்டிய தேவையேற்படுகின்றது. குறிப்பாக விளையாட்டுக்களில் சிறியவர்கள் முதல் பெரியோர்கள் வரை அனைவரும் விருப்பத்துடனும் ஆர்வத்துடனும் ஈடுபட்டு வருகின்றனர். உண்மையில் எல்லாவற்றினையும் மறந்து திருப்தியும் சந்தோசமும் அடைவதே அதன் வெளிப்பாடாகும்.

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான கிளித்தட்டானது அக்கால மக்களின் கலாசார விழுயங்களைப் பிரதிபலித்துக்காட்டும் ஒன்றாக விளங்குகின்றதோடு அம்மக்களின் வாழ்க்கைமுறை, குழு மனப்பான்மை, சமத்துவத்தன்மை, தீர்மானம் எடுத்தல் போன்ற பல அம்சங்களை உள்ளடக்கியதொன்றாகவும் விளங்குகின்றது.

தமிழர் பிரதேசங்களில் கிளித்தட்டானது புதுவருடப் பிறப்பு, தீபாவளி மற்றும் தைப்பொங்கல் போன்ற தினங்களை முன்னிட்டும் அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் சில அமைப்புக்களின் சிறப்பான நாட்களை ஒட்டியும் விளையாடப்படுவது வழக்கமாகும். உண்மையில் ஆரம்பத்தில் மக்களால் பொழுதுபோக்கிற்காக விளையாடப்பட்டு வந்த நிலை மாற்றமடைந்து காலப்போக்கில் போட்டியாக விளையாடுகின்ற விளையாட்டாகவும் பரிணமித்திருந்தது. இதனால் மேற்குறிப்பிட்ட தினங்களில் வெவ்வேறுபட்ட கழகங்களுக்கிடையிலான போட்டியாக வெகுசிறப்பாக நடாத்தப்படுவது முண்டு. இவ்விளையாட்டைக் கண்டுகளிப்பதற்கு பல இடங்களிலுமிருந்தும்

மக்கள் ஒன்றுகூடுவர். மிகவும் விறுவிறுப்பாகவும் பார்ப்பவர்களைப் பரவசமடையச் செய்வதாகவும் இப்போட்டிகள் அமைந்து காணப் படுகின்றன.

போட்டியின் இறுதியில் வெற்றிபெற்றவர்களை மென்மேலும் ஊக்கப்படுத்தும்பொருட்டு பரிசுப்பொருட்களும் பரிசுத்தொகைகளும் வழங்கிக் கௌரவிக்கும் மரபுகளும் காணப்படுகின்றன. இவற்றின்மூலம் பங்குபற்றும் வீரர்களினதும் பார்வையாளர்களினதும் மனதை ஒருநிலைப் படுத்துவதுடன் நல்ல ஆளிடைத்தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளவும் வழியேற்படுகின்றது. இதனாலேயேதான் "மாலை முழுவதும் விளையாட்டு என வழக்கப்படுத்திக்கொள்........." எனப் பாரதி அறிவுறுத்தவும் நேரிட்டது.

உண்மையில் ஆரம்ப காலங்களில் இவ்விளையாட்டு வெகுசிறப்பாக விளையாடப்பட்டு வந்தபோதிலும் தற்போது ஓரிரு பிரதேசங்களிலேயே விளையாடப்பட்டு வருகின்றமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அத்தோடு குறிப்பிட்ட சில வீரர்களே ஆர்வம்காட்டியும் வருகின்றனர். அதுவும் காலப்போக்கில் இல்லாமல் போகின்ற சந்தர்ப்பங்களுமுண்டு. இதற்குரிய காரணங்களை ஆராய்ந்தபோது, மேலைத்தேய விளையாட் டுக்கள் மீது இளைஞர்கள் கொண்ட மோகமே முதன்மையானதாகும். இவ்விளையாட்டுக்கள் சர்வதேச ரீதியில் அரச அங்கிகாரங்களுடன் மிகச் சிறப்பாக விளையாடப்பட்டு வருவதனால் எல்லோரும் அவ்விளை யாட்டுக்கள் மீது விருப்பமும் ஆர்வமும் கொள்ளுகின்ற நிலையேற்றப் பட்டுள்ளது. இதனால் பாரம்பரிய விளையாட்டுக்கள் புறக்கணிப் பிற்குள்ளாகின.

மறுபுறம் பாரம்பரிய விளையாட்டுக்களை புறக்கணித்தமையினால் ஏற்படுகின்ற விளைவுகளை உற்றுநோக்குகின்றபோது, சமூகங்களுக் கிடையில் ஒற்றுமைப்பாடு மற்றும் பொதுநலநோக்கு போன்ற நற்பண்புகள் நலிவடையத் தொடங்கின. இதனால் பல்வேறுபட்ட தீய சிந்தனைகள் தலைதூக்கத் தொடங்கியமையை அவதானிக்கக்கூடியதாயுள்ளது. எடுத்துக்காட்டாக, கலாசார விழுமியங்களை மதித்துக் கட்டுக்கோப்புடன் வாழ்ந்த இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகள் இன்று வன்முறைகள் அதிகம் இடம்பெறுகின்ற பிரதேசங்களாக மாறியுள்ளன. இதற்குப் பாரம்பரிய விளையாட்டுக்களை புறக்கணித்தமையும் ஒரு காரணமாகும். இந்நிலையை மாற்றி பாரம்பரிய விளையாட்டுக்களை அறிமுகப்படுத்தி இவற்றினூடாக நற்சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சி களை முன்னெடுத்தல் அவசியமானதொன்றாகும்.

எனவேதான் குழு மனப்பான்மையை உருவாக்குதல், சமூகங்களிற் கிடையிலான ஒற்றுமையை மேம்படுத்தல், வெற்றி தோல்விகளை ஏற்றுக்கொள்ளுகின்ற மனப்பக்குவ நிலையை உருவாக்குதல் போன்ற நற்பண்புகளை வளர்த்தெடுப்பதோடு எமது வாழ்வியலோடு பின்னிப் பிணைந்துள்ள கிளித்தட்டு போன்ற விளையாட்டுக்களை பேணிப் பாதுகாப்பதும் அதனை புத்துயிர் பெறச்செய்வதற்குமான நடவடிக்கைகளை

முன்னெடுத்தல் இன்றியமையாததொன்றாகும். அத்தோடு கபடி போன்ற விளையாட்டுக்கள் தேசிய ரீதியில் (குறிப்பாக தென்னிந்தியாவில்) அங்கிகரிக்கப்பட்டு விளையாடப்பட்டு வருவதுபோல கிளித்தட்டினையும் அங்கிகரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும். மேலும் இவ்விளையாட்டினை மேம்படுத்தும்பொருட்டு புலமைசார்ந்தவர்களைக் கொண்டுபயிற்சிசெய்வதற்கானவசதிகளையும்பயிற்சிப்பட்டறைகளையும் ஒழுங்கு செய்வதோடு பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆடுகள விதி முறைகளை கட்டமைப்பதும் அவசியமானதொன்றாகும். மேலும் புலம் பெயர் தமழர்கள் செறிந்து வாழும் நாடுகளில் கிளித்தட்டு விளையாட்டை தமிழர்கள் விளையாடித் தாம் வாழும் நாட்டைச் சார்ந்தவர்களிடத்திலும் அறிமுகப்படுத்தவேண்டியதும் கடமையாகும்.

## முடிவுரை

தமிழர் மத்தியில் குறிப்பாக இலங்கையின் வடக்கு கிழக்கில் வெகுவிமரிசையாக விளையாடப்பட்டு வந்த கிளித்தட்டானது காலப் போக்கில் அதன் செல்வாக்கை இழந்து படிப்படியாக நலிவடையத் தொடங்கி தற்போது அழியும் தருவாயில் உள்ளது. இதற்குரிய காரணங்கள் மேலைத்தேய விளையாட்டுக்களின் வருகையும் பண்பாட்டு மாற்றங்களே யாகும். இருந்தும் நமது பாரம்பரியங்களை மழுங்கடிக்காது அவற்றைக் பேணிப்பாதுகாப்பது மிக அவசியமானதொன்றாகும். எனவேதான் நலிவடைந்துபோயுள்ள இப்பாரம்பரிய விளையாட்டுக்களை மீளுருவாக்கம் செய்து புத்துயிரளிப்பது நமது ஒவ்வொருவரினதும் கடமையாகும். இதன்படி நமது வாழ்வியலுடன் இரண்டறக்கலந்துள்ள இவ்விளையாட்டினை பேணிப்பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கு அறிமுகப்படுத்துவதுடன் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அங்கிகாரம் பெறச்செய்வதும் காலத்தின் கட்டாய தேவையாகும்.

## உசாத்துணைப்பட்டியல்

1. ஏப்ரகாம். ஜே. எஸ்., (1999). கபடி முதல் கிரிக்கட் வரை. சென்னை: நர்மதா பதிப்பகம்.

2. தேவநேயப்பாவாணர் (2000). தமிழ்நாட்டு விளையாட்டுக்கள். சென்னை: தமிழ்மண் பதிப்பகம்.

3. உடற்கல்வி - விளையாட்டுத்துறை அபிவிருத்திக்கான மூன்றாண்டு செயன்முறைத் திட்டம் (1997-1999) திருகோணமலை: மாகாணக்கல்வித் திணைக்களம்.

4. தினக்குரல் நாளிதழ் 15.06.2019, 03.08.2019

5. ஞானம் சஞ்சிகை, தொடர்- 153, (மாசி-2013)

6. கலைக்கேசரி, தொடர். 5, (2011).

7. www.wikipedia.org, www.yarl.com, www.noolaham.org

## கட்டமைக்கப்பட்ட நேர்காணல்கள்

1. திரு. இராசரத்தினம் லதுஜன் - யாழ் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக்கழகம். தாச்சி வீரன்
2. திரு. ச.ஜெயபாலன், நூலக உதவியாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். தாச்சி வீரன்
3. திரு. சி. சண்முகலிங்கம் (யாழ்ப்பாணம்), தாச்சி வீரன், தாச்சி நடுவர்.